[1998 மே 5

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 424, திரு. இ. ஜி. சுகவனம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

424—

தருமபுரி மாவட்டத்தில் மின் வசதி

***9712—திரு. இ. ஜி. சுகவனம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் சிங்காரப்பேட்டை மின் மாற்றி அடிக்கடி பழுதடைவதால், மாவட்டத்தின் பெரும்பான்மையான இடங்களில் மின்சாரத்திற்கு அடிக்கடி தடை ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நிரந்தரமாக தருமபுரி மாவட்ட மக்களுக்கு மின்சாரம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிங்காரப்பேட்டை 230/110 கி.வோ. துணை மின் நிலையத்தில் உள்ள ஒரு தானியங்கி மின் மாற்றியில் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவினை (Oil Leakage) சரி செய்யும் வேலை 10-2-1997 முதல் 2-4-1997 வரை நடைபெற்று வந்ததால், தருமபுரி மாவட்டத்தில் கரியமங்கலம், கிருஷ்ணகிரி மற்றும் மாத்தூர் ஆகிய பகுதிகளில் மின் தடங்கல் இருந்தது. தற்பொழுது மேற்குறிப்பிட்ட பணி முடிக்கப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

திரு. இ. ஜி. சுகவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காரப்பேட்டையில் அமைந்திருக்கக்கூடிய, 1962ஆம் ஆண்டு

1998 மே 5]

அமைக்கப்பட்ட இரண்டு மிகப் பெரிய டிரான்ஸ்பார்மர்கள் அடிக்கடி பழுதடைந்து விடுகின்றன. அதன் காரணமாக, தருமபுரி மாவட்டம் முழுவதிலும் மின் தடை ஏற்பட்டு விடுகிறது. அங்கு ஒரு புதிய டிரான்ஸ்பார்மர் அமைத்தால், மிகவும் நல்லமுறையில் இருக்கும். ஆகவே, தயவுகூர்ந்து, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான உடனடி நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது 'டிரான்ஸ்பார்மரால்' ஏற்பட்ட கோளாறு அல்ல. சப்-ஸ்டேஷனில் ஏற்பட்ட கோளாறு. தருமபுரியிலே, பொதுவாக மின்னழுத்தம் காரணமாக, அடிக்கடி இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்றன. இதை அரசு உணர்ந்து, தருமபுரி மாவட்டத்திலே அரூர், பெண்ணாகரம், தருமபுரி ஆகிய இடங்களிலே 33/11 கி.வோல்ட் துணை மின் நிலையத்தை 110/11 கி.வோல்ட் துணை மின் நிலையமாக மாற்றுவதற்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அதுபோல, பெரும்பாலை, நெருப்பூர், புதுப்பட்டி, தைத்தான், பேரிகை, காரப்பட்டு, மஞ்சவாடி, ஈச்சம்பாடி ஆகிய இடங்களில் 33/11 கி. வோல்ட் துணை மின் நிலையங்களை அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

முற்பகல் 9-35

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தருமபுரியா? (குறுக்கீடு) வாய்ப்பு கிடையாது.

வினா எண் 425, திரு. இ.ஏ.பி. சிவாஜி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

425—

மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைத்தல்

***6816—திரு. இ.ஏ.பி. சிவாஜி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி நகருக்கான இரண்டாவது மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?